Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி - 25 08-04-2003 செவ்வாய்க்கிழமை ஓசை 49

வவுனியா நகரில்
வசந்தம் வீசும்
புடவை உலகில்
உங்களின் நட்புக்கு.
சாந்தா ரெக்ஸ்
பஜார் வீதி, வவுனியா
T.P:24-22879

### கிளிநொச்சியில் நான் தங்கியிருந்த வேளை

# சிங்கள இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் அணி

# தலைவரைக் குறிவைத்தே வன்னிக்குள் புகுந்தது!

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்



**"நான் கிளிநொச்சியில் நின்றிருந்த சமயத்தில் சிங்கள இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்குதல் நடத்தும் அணி வன்னிக் காட்டிற்குள் ஊடுருவியமை என்னை இலக்கு வைத்ததல்ல. நான் வன்னியில் இருக்கும் சமயத்தில் தலைவர் பிரபாகரன் அவர்களின் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு - அவரைக் குறிவைத்தே இத்தாக்குதல் அணி ஊடுருவியது" எனப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.**

ஜெனிவாவில் நடைபெற்ற புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் பேரணியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

சமீபத்தில் பத்திரிகைகளில் அறிக்கை ஒன்று வந்தது. அதில் பாலசிங்கம் தம்பதியர் கிளிநொச்சியில் நிற்கும் போது சிங்கள் இராணுவம் ஆழ ஊடுருவித் தாக்குவதற்காக ஒரு ஆயுதக்குழுவை வன்னிக் காட்டுக்குள் - கிளிநொச்சிக் காட்டுக்குள் அனுப்பியதாக செய்திகள் வந்திருந்தன.

அந்தச் செய்திகள் உண்மைதான். ஆனால் இந்த ஆழ ஊடுருவித் தாக்குதல் நடத்த முனைந்தது பாலசிங்கத்தை கொல்வதற்கல்ல. அது எமது தலைவர் பிரபாகரன் அவர்களை இலக்கு வைத்துத் தான் இந்தக் குழு அனுப்பப்பட்டது.

நான் கிளிநொச்சியில் நிற்கும் சமயத்தில் அனேகமாக தலைவர் அவர்கள் வெளியே வந்து இராஜதந்திரிகளையும் மற்றும் பிரமுகர்களையும் சந்திப்பது வழக்கம். ஆகவே தலைவர் அவர்கள் வெளியே வருவார். அவரைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்துவதற்காகத் தான் இந்த ஆழஊடுருவித் தாககும் குழு அனுப்பப் பட்டது.

ஆனால், நாங்கள் எங்களுடைய படையணிகளை, பல்லாயிரக் கணக்கான எமது புலி வீரர்களை காட்டுப் பிரதேசங்களுக்கு அனுப்பி சல்லடை போட்டுத் தேடி இந்தக்குழுவைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தோம். நாங்கள் உஷார் அடைந்ததைக் கண்ட சிறிலங்கா ஆயுதக்குழு அங்கிருந்து இரவிரவாக நழுவிவிட்டதாகப் பின்னர் அறிந்தோம்.

ஆகவே, ஒருபுறம் சமாதானப் பேச்சு நடந்துகொண்டிருந்தது. மறுபுறம் எமது தலைமையைக் குறி வைத்து இராணுவத்தில் உள்ள சில பிரிவுகள் செயற்படுவதாக எமக்கு ஆழமான சந்தேகம் இருக்கிறது. ஆகவே நாங்கள் மிகவும் விழிப்பாக இருக்கின்றோம்.

பேச்சுவார்த்தைகள் பற்றியும் இன்றைய நிலைமை பற்றியும் இந்தப் பேச்சுவார்த்தைகள் எந்த நிலையில் செல்கின்றது என்பது பற்றியும் அந்தப் பேச்சுவார்த்தை மூலம் எமது மக்களுக்கு விடிவு வருமா? எமது பிரச்சினைக்கு ஒரு தீர்வு வருமா என்பதைப் பற்றியும் உங்களுக்கு இங்கு எடுத்து விளக்க முயற்சிக்கின்றேன்.

இப்பொழுதும் இராணுவ ரீதியான பிரச்சினையே உள்ளது. ஏனென்று சொன்னால் நாங்கள் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக அமைதியைப் பேணி வருகின்றோம். எத்தனையோ ஆத்திரமூட்டும் செயல்களுக்கு மத்தியிலும் பொறுமையை இழக்காது, நிதானத்தை இழக்காது - அமைதியைப் பேணி வருகிறோம்.

ஆனாலும், தமிழீழ தேசத்தில் குறிப்பாக வடக்கு - கிழக்கில் - யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலை இன்னும் தோன்றவில்லை. அங்கு மூலைக்கு மூலை இராணுவம். நாற்பதினாயிரம் படைகள் ஒரு சிறிய பூகோள பிரதேசத்தை ஆக்கிரமித்து நிற்கின்றன.

எமது போர்நிறுத்த உடன்பாட்டின் விதிகளின்படி இந்த இராணுவம் எமது பாடசாலைகள், கல்லூரிகள், கோவில்கள், வீடுகள், குடியிருப்புக்கள் இவற்றில் இருந்து விலகியிருக்க வேண்டும்.

இந்த ஆறு மாதமாக நாங்கள் பேசியும் இராணுவம் தனது இலக்குகளைவிட்டு விலகுவதற்கு தயங்கிக் கொண்டிருக்கின்றது. அதாவது, தங்களது நிலையில் இருந்து விலகி இந்த மக்களை திரும்பி அவர்களது வீடுகளுக்குச் செல்வதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது.

இப்பொழுது சொல்கின்றார்கள், இராணுவம் நிலை கொண்டிருக்கின்ற கேந்திர முக்கியம் வாய்ந்த இடங்களை சுட்டிக்காட்டி இவையெல்லாம் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்று.

வலிகாமம் வடக்கில் இருந்து இராணுவத்தை விலகும்படி கேட்டால் அது உயர் பாதுகாப்பு வலயம். அதிலிருந்து விலகினால் எங்களுக்கு ஆபத்து என்றுகூறி இறுக்கிப் பிடித்து வைத்திருக்கிறார்கள்.

சரி, தாங்கள் அப்படித்தான் விலகுவது என்று சொன்னால் விடுதலைப் புலிகளிடம் இருக்கின்ற கனரக ஆயுதங்கள், பீரங்கிகளை அவர்கள் கையளித்தால் தாங்கள் இந்த இராணுவப் பிரதேசத்தில் இருந்து விலகுகின்றோம் என்று சொன்னார்கள். நாங்கள் அதை உடனடியாக நிராகரித்து விட்டோம். ஏனென்றால் மக்களை குடியமர்த்துவது ஒரு மனிதாபிமான பிரச்சினை. ஐ.நா. சாசனத்தில் சொல்லப்படுகின்றது என்னவென்று சொன்னால் அகதிகள் - இடம் பெயர்ந்தவர்கள் தங்களது குடியிருப்புகளுக்கு திரும்புவது ஒரு தவிர்க்க முடியாத மனித உரிமை. அவைகளைத் தடுப்பது மனித உரிமையை மீறும் செயல் என்று ஐ.நா. சாசனத்தில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றது.

உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியில் உள்ள பிரதேசங்களில் இருந்து இராணுவத்தை விலக்குமாறு கோரினோம். அதன் பின்பு உயர் பாதுகாப்பு வலயங்களைப் பற்றிப் பேசலாம் என்று கேட்டுக் கொண்டோம். அதன்படி அவர்கள் தாங்கள் அதற்கு முயற்சிப்பதாகக் கூறினார்கள்.

ஆனால், இரு வாரங்களுக்கு முன்னர் ஒரு யோசனையைத் தெரிவித்தார்கள். யாழ்ப்பாண நகரத்தின் மையத்தில் ஞானம்ஸ், சுபாஸ் ஹோட்டல்களை பிரிகேட் தலைமையகமாகப் பாவிக்கின்றார்கள். இதனுடன் அண்டிய எண்பது வீடுகளையும் ஆக்கிரமித்திருக்கின்றார்கள். இது யாழ்ப்பாணத்தின் மையப்பகுதி. யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அருகில் இரண்டு, மூன்று வீதிகளையும் அடைத்து எல்லா வீடுகளையும், ஹொட்டல்களையும் எடுத்து அதில் இராணுவம் குந்திக் கொண்டிருக்கிறது.

நாங்கள் சொன்னோம் யாழ்ப்பாண மையத்தில் இருந்து இவர்களை அகற்றுமாறு. அப்போது அகற்றுவதற்கு மாற்றுத்திட்டத்தை தந்தார்கள். அந்தத்திட்டத்தின்படி யாழ்ப்பாண பழைய மாநகர சபை வெளி, கோட்டை முனியப்பர் கோவிலடி, மத்திய கல்லூரிக்கு முன்னால் உள்ள வெளியில், பழைய மாநாகர சபை இவற்றை அடக்கி ஒரு பெரிய பிரதேசத்தை எடுத்து அதில் ஒரு பெரிய இராணுவத் தளத்தை அமைப்பதற்கான ஒரு திட்டம். இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தி ஒரு இராணுவத் தளத்தை பழைய யாழ்ப்பாண மையத்தில் நிறுவினால் தாங்கள் இதிலிருந்து வெளியேறுவோம் என்று சொன்னார்கள். நாங்கள் அதை மறுத்து விட்டோம்.

ஏனென்று சொன்னால் இது ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு நடத்தப்படுகின்ற ஆக்கிரமிப்பே. இராணுவ விலகல் அல்ல. இராணுவம் எமது கலாச்சார மையமான யாழ்ப்பாண தலை நகரத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அதிலிருந்து விலகுவதற்கு எவ்வளவு தடைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறுவதற்கான நோக்கம் ஒன்றும் இல்லை.

ஆகவே, எங்களைப் பொறுத்த வரை இந்த இராணுவத்திற்கு ஆக்கிரமிப்பை கைவிட்டு எமது மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிப் போக அவர்களுக்கு விருப்பம் இல்லை என்பது இப்போது தெட்டத் தெளிவாகின்றது.

இந்த இராணுவ ஆக்கிரமிப்பையே விலக்க விரும்பாத இந்த அரசாங்கம், தமிழர்களுக்கு பூரண சுயாட்சி யுடைய ஒரு தீர்வுத் திட்டத்தைக் கொடுக்குமா? என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாக இப்பொழுது எழுந்திருக்கின்றது.

என்றாலும் நாங்கள் பேசுகின்றோம். ஏனென்றால் உலகத்திற்காக. உலகம் எதிர்பார்க்கின்றது. புலிகள் உண்மையாக, நேர்மையாக இந்த பேச்சுவார்த்தையில்

(08ஆம் பக்கம் பார்க்க)

### ஜெனிவாவில் நடைபெறும்

## ஐ.நா. மனித உரிமை மாநாட்டின் போது புலம் பெயர்ந்த தமிழர் சமாதானப் பேரணி

சுவிற்சலாந்தின் ஜெனிவாவில் ஐ.நா. மன்றில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டின் முன்பாக நேற்று புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மாபெரும் பேரணியை நடத்தி உள்ளனர்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் முழு அளவிலான வர்ணப் படத்தை மக்கள் முன்னே தாங்கி வர தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியும் தாங்கிவரப்பட எண்ணாயிரத்துக்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் நாளை வன்னிக்கு வருகிறார்

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரிலெவ்சன் வன்னிக்கு வரவுள்ளார். நாளை வன்னிவரும் இவர் விடுதலைப் புலிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் அண்மைக்காலமாக இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இந்தப் பேச்சுவார்த்தையில் விரிவாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

# உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாண சபை.

# வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**

**"ஆஅவ" கடன் இல. 1846 - SRI(SF)**

# கேள்வி கோரல் - இல 14

## பாடசாலை மரத்தளபாடங்கள் கொள்வனவு

01. வடக்கு,கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பாடசாலை மரத்தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இல | கேள்வியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் | கூறுவிலை பிணைப்பணம் |
|---|---|---|---|
| 01 | முல்/நீக்கோட்/ஈடி/24 | 1000/= | 33,000/= |

03 பின்வரும் தகுதிகளைத் தாம் கொண்டுள்ளதாக விளங்கும் சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்விகள் கோருவதற்கு தகுதி வாய்ந்தவர்களாவார்கள்.

I கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தத்தை ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான கேள்வி கோருபவர் திருப்திகரமாக முடித்திருக்க வேண்டும். போதியளவு தொகையிலான பாடசாலை மரத்தளபாடங்களை உற்பத்திசெய்யும் ஒரு தச்சுவேலை அல்லது வல் காச்சியொட்டுதல் வேலைத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராக இருக்கவேண்டும் என்பதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பதை நிரூபிப்பதற்கான சான்றிதழை சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்விகோருபவர் வேண்டப்படுகின்றனர்.

II ஒப்பந்தத்தைக் கையாள்வதற்கு கேள்வியொன்றுக்கு ரூபா 0.3மில்லியன் தொழிற்படுத்தல் மூலதனம் உள்ளதென நிரூபிப்பதற்கு கேள்விதாரருக்கு இயலுமானதாக இருக்கவேண்டும். இதற்கு மாற்றீடாக, கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் கொண்ட தொகையொன்றுக்கு இலங்கையிலுள்ள மதிப்புவாய்ந்த வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்ற கடன் வழங்கப்படும் என உத்தரவாதம்பெற்ற கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்படவேண்டும். இத்தகைய கடன் சான்றானது திட்டப்பணிப்பாளருக்கு விலாசமிடப்பட்ட கடிதம் என்ற அமைப்பில் இருக்கவேண்டும் என்பதுடன், கேள்வி கோருபவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால் மேற்கொள்ளப்பட்ட வேலைக்கு பிரத்தியேகமாக இக்கடனை வழங்கும் என அக்கடிதத்தில் தெளிவாகக்காட்டப்பட வேண்டும்.

III மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

04 மேலே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு கேள்விகோரலாம். ஆனால் இத்திட்டத்தின்கீழ் பாடசாலைத் தளபாடங்களை வழங்குவதற்கு நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட இரண்டு ஒப்பந்தத்திற்குக் கூடுதலான ஒப்பந்தத்தைப்பெற தகுதியற்றவராவார்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு -கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD), 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற விலாசத்திலுள்ள திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல: 026-27434 தொலைநகல்: 026-27401 மின்னஞ்சல் necord @sltnet.lk

06. கேள்வி ஆவணங்களை 2003 ஏப்ரல் 07ந் திகதியிலிருந்து 2003 ஏப்ரல் 21ந் திகதிவரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக பந்தி 2 இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி கொள்வனவு செய்துகொள்ளலாம்.

07. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் தலைவர், கருத்திட்ட கேள்விச்சபை NECORD, 140, மின்சார நிலையவீதி, திருகோணமலை என்று விலாசமிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் குறிப்பிட்ட பிணைப்பணம் அடங்கலாக 2003 ஏப்ரல் 28ஆம் திகதி பிற்பகல் 2.30க்கு முன்பதாக கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அந்நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.

08. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணத்தில், இது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

09 சகல கூறுவிலைகளும் இதன் தொடர்பாக பந்தி 2 இல் உள்ள அட்டவணையின் பிரகாரம் கூறுவிலைப் பிணைப்பணத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

11. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன் ஒவ்வொரு வகையான மரத்தளபாடங்களின் மாதிரிகளை தகுதிவாய்ந்தவர்களாக தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்கள் செவ்வை பார்ப்பதன் பொருட்டு சமர்ப்பிக்கவேண்டும்.

**த.லங்காநேசன்**
**திட்டப்பணிப்பாளர்,**
**வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நீகோட்)**
**140, மின்சாரநிலைய வீதி,**
**திருகோணமலை.**

(சி-8060)

# ஈராக் போரில் பெரும் மனித அழிவு; நூற்றுக்கணக்கில் மக்கள் உயிரிழப்பு!



ஈராக்கிய தலைநகர் பாக்தாத்தின் தெற்குப்பகுதியில் அகதிப் பெண்மணி தனது மகனை தூக்கிக் கொண்டு நடந்து செல்கிறார்.

**ஈராக்கில் இடம்பெறும் கடுமையான போரில் பொதுமக்கள் உயிரிழப்பது அதிகரித்துச் செல்வதாக அறிவிக்கப்படுகிறது. உலக சுகாதார ஸ்தாபனம் உட்பட பல்வேறு மனித நேய அமைப்புக்கள் இது குறித்து கவலை வெளியிட்டுள்ளன.**

அமெரிக்கக் கூட்டுப்படையின ருக்கும் ஈராக்கிய படையினருக்கும் இடையில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டில் சிக்குண்டு இறந்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கில் இருப்பதாக உலக சுகாதார ஸ்தாபன அதிகாரியொருவர் தெரிவித்தார். இவ்வாறு இறந்தவர்களில் சிறுவர்களும் அடங்குவதாக அவர் கூறினார்.

மேலும், போரினால் பலத்த தீக் காயங்களுக்குள்ளான சிறுவர்களும் உள்ளார்கள். அனேகம் பேர் அவயவங்களை இழந்தும் உள்ளனர்.

கடுமையான விமானத்தாக்கு தல்கள், ஏவுகணை மற்றும் எறிகணைத் தாக்குதல்களாலும் பெருமளவில் பொதுமக்கள் உயிரிழந்திருப்பதோடு, பலத்த காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

ஏராளமான பெண்களுக்கு கருச் சிதைவு ஏற்பட்டிருக்கிறது என குவைத்தை மையமாகக் கொண்டியங்கும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் தாக்கப்படுவதை தடுப்பதற்காக முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதாக அமெரிக்கா கூறுகிறது. ஆனால் ஈராக்கிய தலைநகரிலுள்ள வைத்தியசாலைகள் போரினால் காயமடைந்த பொது மக்களால் நிரம்பி வழிகின்றன. இதனை அங்கு நிலை கொண்டுள்ள சர்வதேச செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

இந்நிலையில், ஈராக் மீதான கூட்டுப்படைகளின் தாக்குதல்கள் நேற்றும் தீவிரமாக இடம்பெற்றன. அதிகாலை முதல் தலைநகர் பாக்தாத் உட்பட பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து இருதரப்பு படையினரிடையேயும் பலத்த மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

# பேரழிவு ஆயுதங்கள் தென்படவில்லை; ஈராக் அதனை இதுவரை பாவிக்கவுமில்லை!

## - அமெரிக்க கூட்டுப்படை அதிகாரி தெரிவிப்பு

ஈராக்கில் இதுவரை பேரழிவைத் தரும் ஆயுதங்கள் எதனையும் கண்டு பிடிக்கவில்லை என அமெரிக்க இராணுவம் கூறியுள்ளது.

அத்துடன் அவ்வாறான ஆயுதங்களை ஈராக் பாவிக்கக் கூடும் என்ற அச்சுறுத்தல் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி யுத்தம் உருவானது முதல் ஈராக் பிரதேசங்கள் சிறிது சிறிதாகத் தமது கட்டுப்பாட்டில் வரும் நிலையில் ஈராக் பேரழிவு ஆயுதங்களைப் பாவித்து வரும் சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லையென அமெரிக்க கூட்டுப்படை அதிகாரி பிரிகேடியர் ஜெனரல் 'வின்சன் புறுக்ஸ்' கூறியுள்ளார். எனினும் பேரழிவு ஆயுதங்களின் அச்சுறுத்தல் முற்றாக நீங்கிவிடவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.



பாக்தாத்திற்கு வெளியே அமெரிக்க கூட்டுப்படை வீரர் க[illegible] தங்களின் காயப்பட்ட போர் வீரர்களை உலங்கு வானூர்தியில் ஏற்றுகின்றனர்.

## தலிபான்களின் வேண்டுகோள்

ஈராக் யுத்தத்திற்கு முஸ்லிம்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்று தலிபான் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தலிபான் அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஈராக்கியத் தொலைக்காட்சியில் வாசிக்கப்பட்டது. ஈராக் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பு தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்கா பாகிஸ்தானைத் தாக்கினால் அணுவாயுதத்தை உபயோகிக்க வேண்டும்!

## - அணு விஞ்ஞானி காதர் கான் அறிவுரை

அமெரிக்கா பாகிஸ்தானை தாக்குமானால் பாகிஸ்தான் அணுவாயுதத்தை உபயோகப் படுத்த வேண்டும் என்று பாகிஸ்தானின் உயர்மட்ட அணுசக்தி விஞ்ஞானி டாக்டர் அப்துல் காதர் கான் தெரிவித்துள்ளார்.

கராச்சியில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் பாகிஸ்தான் அணு ஆயுதத்தை உபயோகப்படுத்த வேண்டிய நேரம் வரும் என்று கூறினார்.

இதேவேளை, தற்சமயம் பாகிஸ்தானிடம் 68 அணுவாயுதங்கள் இருக்கின்றன. மேலும் 34 அணுகுண்டுகளைத் தயாரிக்கத் தேவையான உபகரணப் பொருட்கள் இருக்கிறது என முல்ரேன் நகரில் நடைபெற்ற அமெரிக்காவுக்கு எதிரான பேரணியில் உரை நிகழ்த்திய மக்கள் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் யாவே காஷ்மி கூறினார்.



பஸ்ரா நகரத்திலுள்ள சனாதிபதி சதாம் ஹுசைனின் உருவச்சிலையை பிரித்தானிய கூட்டுப்படையினர் உடைத்து எறிவதைக் காண்க.



ஈராக்கிய பொதுமகன் தனது மகனின் கையைப் பிடித்தபடி பாக்தாத் வைத்தியசாலையொன்றுக்குள் செல்கின்றார்.

# புதிய அரசை உருவாக்க 6 மாத காலம் தேவைப்படும்

## - பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

(வாஷிங்டன்)

சதாம் ஹுசைனின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் ஈராக்கை வழி நடத்திச் செல்லும் அரசாங்கம் ஒன்றை உருவாக்க ஆறு மாதங்களுக்கு மேல் செல்லும் என்று அமெரிக்காவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். தொலைக் காட்சி ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

1991ஆம் ஆண்டு வளைகுடா யுத்தத்தினை அடுத்து ஈராக்கின் குர்திஷ் பிரதேசம் உருவாக ஆறுமாதங்களுக்கு மேல் சென்றதாகக் குறிப்பிட்ட அவர் தற்போதைய நிலை சிக்கலாக இருப்பதால் ஈராக்கில் புதிய அரசாங்கம் உருவாக ஆறுமாதங்களுக்கு மேல் செல்லும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இடைக்காலத் தடை!

(சென்னை)

சென்னை ராணிமேரி கல்லூரியை இடிக்க சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. அத்தோடு விடுதியை விட்டு மாணவிகளை வெளியேற்றும் நடவடிக்கைக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு கல்லூரியை இடித்து விட்டு அதில் அரச தலைமைச் செயலகத்தை அமைக்க முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் அலுவலகம் தீக்கிரை!

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் ஆர்சே மாநிலத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

மூந்நூறு பேர் கொண்ட குழுவினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த மாநிலத்தில் பிரிவினைவாதிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே கடந்த டிசம்பர் மாதம் போர் நிறுத்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஹென்றி டுனன்ற் வெறன்ரர் என்ற அமைப்பு உடன்படிக்கையின் பின்னணியில் இருந்தது.

தாக்குதல் பற்றி கருத்து வெளியிட்ட அதன் பேச்சாளர் "இது மிகவும் சிக்கலான விடயம்" என்று கூறினார்.

# வன்னியில் கல்வியின் பின்னடைவுக்கு ஆசிரியர் பற்றாக்குறையே முக்கிய காரணம்

## தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன்

வன்னிப்பகுதியின் இன்றைய கல்வி நிலை மிகவும் பின்தங்கி உள்ளமைக்கு முக்கிய பிரச்சினை ஆசிரியர் பற்றாக்குறையே ஆகும். கிட்டத்தட்ட 85000 மாணவர்கள்



வரை கல்விகற்று வரும் வேளையில் தற்போது உள்ள ஆசிரியர்களைவிட 1800 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவிவருகின்றது.'

இன்றைய கல்விநிலை பற்றியும் தகவல் தொழில்நுட்ப அறிவுபற்றியும் கல்விக் கழகத்தினால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள தமிழீழ வரலாற்றுக் கல்வி தொடர்பாகவும் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் அவர்களுடனான நேர்காணலின் போது அவர் தெரிவிக்கையில்;

**☐ தற்போது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவுமாணவர்களிடையே எந்தளவிற்கு விருத்தியடைந்துள்ளது?**

தகவல் தொழில்நுட்பம் விருத்தியடையவில்லை என்றே கூறவேண்டும். கணினிகளை அரசு சில பாடசாலைகளுக்கு வழங்கியிருந்தாலும் முழுமையாக வழங்கவில்லை. அதற்கான மின்பிறப்பாக்கிகள் ஏதும் வழங்கப்படவில்லை. இது ஒரு கண்துடைப்புக்காகவே வழங்கப்பட்டுள்ளது.

சிங்களப் பிரதேசங்கள் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைப் பொறுத்தவரை பிரச்சினையில்லை. இங்கு பெரும் பின்னடைவாகவே உள்ளது. உயர்தர வகுப்பிற்கு அறிமுகப்படுத்தியபோதும் அது பயனுடையதாக இன்னும் அமையவில்லை. தற்போது சாதாரணதர மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்தப்போவதாக தெரிவித்துள்ளனர். இது இங்குள்ள மாணவர்களுக்கு பெரும்பாதிப்பையே ஏற்படுத்தும் என்றே கூறவேண்டும்.

தகவல் தொழிலநுட்ப அறிவை விரிவுபடுத்திக் கொள்வதற்குப் புதிய வசதிவாய்ப்புக்கள் ஆளணிகளை விரிவுபடுத்திக்கொண்டால் மட்டும் சாத்தியமாகும். தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவில் மிகவும் பின்தங்கியவகையில்தான் நாங்கள் நின்று வருகின்றோம்.

**☐ Z புள்ளித்திட்டம் பற்றிய தங்களின் கருத்து என்ன?**

குறிப்பிட்ட சில பாடங்களின் மூலம் குறிப்பிட்டசிலர் மாத்திரம் பல்கலைக்கழக அனுமதி பெற்றுச்செல்வதையும் கருத்தில்கொண்டு இதனைத் தடுக்கும் முகமான ஒரு நல்ல நோக்கமாக இது அமைந்துள்ளது.

கலைப்பிரிவை எடுத்துக்கொண்டால் பல்கலைக்கழக அனுமதி பெறவேண்டும் என்றால் இந்து சமயம் இந்து நாகரிகம், அளவையியலும் விஞ்ஞான முறையும் போன்ற பாடங்களைக் கூடுதலான மாணவர்கள் எடுக்கின்றனர்.

இதன் மூலம் பல்கலைக்கழகத்திற்கு மாத்திரம் போகின்றார்களே தவிர வேறு எதுவித பலனும் இல்லை என்றே கூறவேண்டும்.

எல்லாப்பாடங்களையும் பகிர்ந்து எடுப்பதற்கும் எமக்குத் தேவையான பாடங்களை எடுக்க வைப்பதற்குமான ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள இந்தமுறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

Z புள்ளி முறையில் மாணவர்களுக்குப் பாதிப்பு என்று இல்லை பாடரீதியான முன்னேற்றம் காணப்படும். தற்போது வரலாற்றை ஒரு பாடமாக எடுப்பவர்களின் எண்ணிக்கை குறைவு என்றே கூறவேண்டும். Z புள்ளித்திட்டம் மூலம் இதனையும் காலப்போக்கில் நிவர்த்திசெய்து கொள்ளலாம். எல்லாப்பாடங்களுக்கும் ஆசிரியர்கள் இல்லை. ஆசிரியர்கள் இருக்கின்ற பாடங்களை மாணவர்கள் எடுப்பதனாலும் இவ்வாறு பிரச்சினையாகவுள்ளது.

உண்மையில் எமது பகுதிக்கு என்ன பாடங்களை எடுக்கவேண்டும் என்ன தேவை என்பதையும் வேலை வாய்ப்புக்கும் இது முக்கியம். மாணவர்களுக்குத் தெரியப்படுத்தி இதற்கு நாங்கள் வழிகாட்ட வேண்டும். கல்வி மேம்பாட்டுப் பேரவை ஊடாக ஒரு குழுவை அமைத்து இதற்கான முயற்சிகளைச் செய்து வருகின்றோம்.

**☐ இன்று தொண்டராசிரியர்கள் நடத்திவரும் போராட்டம் நியாயமானதா? அதுபற்றிக் கூறமுடியுமா?**

தொண்டராசிரியர்களின் போராட்டம் நியாயமானது. பத்துவருடங்களாகத் தொண்டர் ஆசிரியர்களின் பணியினாலே கல்வி வளர்ச்சியடைந்தது வன்னியை விட ஏனைய இடங்களில் போராட்டங்கள் அடிக்கடி தொடர்ந்து இடம்பெற்று வந்தன. ஆனால் இங்கு அப்படி நடக்காவிட்டால் எமது மாணவர்களுக்கு தான் பாதிப்பு என்று தெரிவித்து அதனை நிறுத்தி வந்துள்ளோம்.

ஆகவே இவர்களது போராட்டம் நியாயமானது என்றே கூறுகின்றோம். பட்டதாரி நியமனம் என்றால் அவர்களை எடுத்தவுடன் உரிய வகுப்புக்களுக்கு கற்பித்தலில் ஈடுபடுத்த முடியாது ஆனால் இவர்கள் கற்பித்தலில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக உள்ளனர். இவர்களுடைய போராட்டம் அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதோடு எமக்கு உள்ள ஆசிரியர் பற்றாக்குறையையும் ஓரளவு நிவர்த்தி செய்ய உதவும்.

**☐ தற்போது வன்னியின் கல்விநிலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதுபற்றித் தங்களது கருத்து?**

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்னர் வேறு இடங்களில் இருந்து ஆசிரியர்கள் இங்கு வந்து கடமையாற்றினார்கள். தற்போது ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் அவர்கள் சொந்த இடங்களுக்குச் சென்று கடமையாற்றுவதனால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது இதனை நிவர்த்திசெய்வது என்றால் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவேண்டும். இங்குள்ள ஆசிரியர்கள் உரிய காலப்பகுதிக்கு கடமையாற்றாது வெளியில் போய் வேறு இடங்களில் கடமையாற்றுகின்றனர். இவர்களை உரிய காலத்திற்கு உரிய இடங்களில் கடமையாற்றச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இனி வழங்கப்படும் புதிய ஆசிரியர் நியமனங்களும் எந்தப்பகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கின்றதோ அந்த இடங்களுக்குத்தான் அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும். இது தொடர்பாக மாகாண கல்வியமைச்சிற்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

**☐ வன்னியில் உள்ள கல்வி வலயங்களில் மிகவும் பின்தங்கிய வலயங்களாக துணுக்காய், மடு உள்ளன. இதற் கான காரணம்?**

நேர்காணல் சி.பாஸ்கரன்



துணுக்காய் வலயம் ஒரு பெரிய பிரதேசத்தை உள்ளடக்கியதாகவும் பின்தங்கிய இடமாகவும் இருப்பதோடு பாடங்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள் இல்லை. புதிதாக ஆரம்பிக்கப்பட்டதனால் வசதிவாய்ப்புக்கள் இல்லை. இதனாலே இவ்வலயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல மடு வலயமும் உள்ளது.

**☐ தமிழீழ கல்விக்கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ள தமிழீழ வரலாறும் சமூகக் கல்வியும் என்ற நூல் தொடர்பாக கூறுவீர்களா?**

வரலாறுகள் என்ற ரீதியில் தமிழ் மக்களின் பழைய வரலாறுகள் எல்லாம் மூடிமறைக்கப்பட்டு சிங்கள வரலாறுகளாக திரிக்கப்பட்டு வருவதனால் இது உருவாக்கப்பட்டுள்ளது. சமூகக்கல்வி என்ற பாடப்பரப்பை பொறுத்தவரையில் தமிழர் பாரம்பரியமாக வாழ்ந்த எமது மண், நீர்வளம் போன்றவற்றைப் பற்றிய அறிவுகள் இல்லாமல் எமது சூழல் பற்றிய அறிவு இல்லாமல், வேறு ஒரு சூழல் பற்றிப்படித்துக் கொள்வது எமது வாழ்க்கைக்குப் பயன்படாது.

இதனைக் கருத்திற்கொண்டு ஆண்டு 6,7,8 ஆகிய வகுப்புக்களுக்கு அவ்வகுப்பிற்கேற்ப நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். தற்போது ஆண்டு 9இற்கும் அறிமுகப்படுத்துவதாகவும் தீர்மானித்துள்ளோம். இப்பாடப் பரப்பு சாதாரணதர, உயர்தர பொதுக்கல்வித் தேர்வுகளைப் பாதிக்காத வகையில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

**☐ [illegible] வரலாறுகள் பற்றிய அறிவு மாணவர்களிடையே [illegible] தூரம் வளர்ச்சி கண்டுள்ளது?**

[illegible] என்ற அடிப்படையிலும் ஒருபக்கப் பொது அறிவு [illegible] அடிப்படையிலும் நல்லநிலையில் வளர்ந்துள்ளதை [illegible]னிக்க முடிகின்றது.தமிழீழ சமூகக் கல்வியும் வ[illegible]றும் பற்றி சிங்கள அரசுகள் பல முரண்பாடான கருத்துக்களைக் கூறிவருகின்றது தொடர்பாகத் தங்கள் கருத்து?

சிங்கள வரலாறுகள் காலத்தோடு ஒட்டாமல் அல்லது ஒரு அறிவியல் ரீதியாக நோக்காமல் மகாவம்சம் என்ற சமய இதிகாஷத்தை மையமாக வைத்து தமது இனம் பற்றிய கருத்தை கூறி வருகின்றது.

அந்த வரலாற்றில் சில பிழைகள் இருப்பதாகப் பல சிங்கள மக்களும் சிங்கள வரலாற்று ஆய்வாளர்களும் கூறியிருக்கின்றார்கள். இவ்வாறு நிலமை மாறிக்கொண்டு செல்கின்றது. மகாவம்சத்தின் அடிப்படையில் சொல்லப்படுகின்ற சிங்களக் குடியேற்றங்கள் எல்லாம் அது சொல்லப்படுகின்ற குறிப்பிட்ட இடங்களில் ஆரியக் குடியேற்றத்திற்கான எந்தவித தடயங்களும் இல்லை என அறியப் பட்டுள்ளது.

அந்த இடங்கள் ஆரம்பத்தில் இருந்து திராவிட மக்கள்




வாழ்ந்த ஒரு பகுதியாக இருக்கின்றது என்பதை அகழ்வுகள் மூலம் கிடைக்கப்பெற்ற சான்றுகள் கூறிநிற்கின்றன.

அறிவியல் ரீதியாக நோக்கினால் சிங்களவர்களின் கூற்று பொய்யாகி வருகின்றது. உண்மையான வரலாறுகள் மூடிமறைக்கப்பட்டது என்று சொன்னால் ஐரோப்பியர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் அதாவது 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் இனம் வாழ்ந்துள்ளது.

ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இங்கு மூன்று அரசுகள் இருந்ததாகவும் அதிலும் யாழ்ப்பாண அரசு மிகவும் வலிமை பொருந்திய ஒரு அரசாக இருந்ததோடு பழமை வாய்ந்த ஓர் அரசாகவும் விளங்கியுள்ளது. ஐரோப்பியர் வருகைக்குப் பின்னும் இந்த யாழ்ப்பாண அரசு வலிமை பெற்று விளங்கியது.

இது பற்றி நாங்கள் மட்டும் கூறவில்லை. சிங்கள வரலாற்று ஆய்வாளர்களும் கூறியிருக்கின்றார்கள்.

சில சிங்களத் துறைமுகங்கள் கூட யாழ்ப்பாண அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து திறைசெலுத்தி வந்துள்ளன என அறிய முடிகின்றது. அவர்கள் வெளிப்படையாக சொல்வது மகாவம்சத்தை வைத்துத்தான் பாடப்புத்தகங்களினூடாக இவ்வாறான தமிழ் அரசுகள் இருக்கவில்லை என்றே கூறிவருகின்றனர். ஏற் கனவே கூறப்பட்டுவந்த எல்லாளன்/ பண்டாரவன்னியன் பற்றி தமிழ்ப் பாடப்புத்தகங்களில் முன்னர் வந்தவற்றை யெல்லாம் தற்பொழுது இருட்டடிப்புச்செய்து வருகின்றனர்.

# பல்லூடகம் (மல்ரி மீடியா)

அறிவியல் உலகில்

இன்றைய உலகம் தகவல் தொழில்நுட்ப உலகம் என அழைக்கப்படுகிறது. உலகளாவிய ரீதியில் தகவல்களை வெகுவிரைவாகப் பரவச் செய்வதற்கு இன்று பலவகை ஊடகங்கள் காணப் படுவதே இவ்வாறு அழைக்கப்படுவதற்குக் காரணமாகும். இன்று முதன்மையாக உற்று அவதானிக்கப்படுகின்ற அமெரிக்காவின் ஈராக் மீதான யுத்தம் குறித்த தகவல்கள் உலகம் முழுவதும் நிமிடத்துக்கு நிமிடம் வெளியாகிக்கொண்டிருக்கிறன. தகவல்கள் சரியா? என்பதை உறுதிப்படுத்த பல்வேறு செய்தி நிறுவனங்களால் முடிகிறது. இதற்கு இத் தகவல் தொழில்நுட்பமே காரணமாக இருக்கிறது.

இவ்வாறு பெறப்படும் தகவல்கள் பல்வேறு சாதனங்களினூடாக எமக்குக் கிடைக்கின்றன. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் என்பவற்றுக்கும் மேலாக இணையத்தினூடாகவும் நாம் உடனுக்குடன் தகவல்களைப் பெற முடிகிறது. இப்பொழுது செய்மதியூடான ஒலி, ஒளிபரப்பின் காரணமாக



தொலைக்காட்சி சேவைகள் வானொலிச் சேவைகள் என்பன மூலம் வெகுவேகமாகத் தகவல்கள் பரவுகின்றன. இவற்றைவிட இணையம் இன்று உலகளாவிய ரீதியில் தகவல் வழங்கும் சாதனமாக உள்ளது.

இவ்வாறு எமக்கு கிடைக்கும் தகவல்களை நாம் முன்னர் வானொலியூடாக ஒலியாகவும் பத்திரிகைகள், சஞ்சிகைகளூடாக எழுத்துக்கள், படங்களாகவும் தொலைக்காட்சியூடாக ஒலி / ஒளி வடிவங்களாகவும் பார்வையிடக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு பல்வகை சாதனங்களூடாக தகவல் பரிமாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வகையில் பலவகை ஊடகங்களின் ஒன்று சேர்ப்பாக பல்லூடகம் (மல்ரி மீடியா) விளங்குகிறது. அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட ஊடகங்கள் மூலம் தகவல் பரிமாறப்படும் போது அது பல்லூடகம் என அழைக்கப்படலாம். உதாரணமாக ஒருவகுப்பறையில் ஆசிரியர் ஒருவர் கற்பிக்கும் போது பாடத்தினை வாயால் கூறிக்கொண்டு கரும்பலகையில் எழுது வாரானால் அதனைப் பல்லூடகச் செயற்பாடாகக் கொள்ளலாம். இங்கு பாடம் கற்பிக்க ஒலி ஒரு ஊடகமாகவும் எழுத்து மற்றொரு ஊடகமாகவும் பயன்படுவதே அவ்வாறு அழைக்கக் காரணமாகும். இதேவேளை ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டால் அங்கு ஒலி, ஒளி, வரைபடங்கள், எழுத்துக்கள், படங்கள் என பல ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.


ஆனால் கணினியில் பல்வேறு ஊடகங்கள் பயன்படுத்த ஆரம்பித்த பின்னர் பல்லூடகம் **(Multi media)** என்ற சொல் பிரபல்யம் பெற்றது எனலாம். அதாவது, கணினியானது இன்று பல ஊடகங்களை ஒருங்கிணைத்துச் செயற்படும் சாதனமாகி விட்ட நிலையில் மல்ரி மீடியா என்ற பதம் பொதுவாகப் பலராலும் அறியப்பட்ட ஒன்றாகிவிட்டது எனலாம்.

கணினியைப் பொறுத்த வரை ஆரம்பத்தில் எழுத்து வடிவத்தில் மட்டுமே தகவலை வெளியிடும் சாதனமாக இருந்தது. இப்பொழுது எழுத்துருவுடன் மட்டுமல்லாது,

1. படங்கள்
2. ஒலி (இங்குபேச்சு, இசை)
3. வரை கலை **(Graphics)**
4. உருவேற்றம் **(Animation)**
5. எழுத்துக்கள்

எனப் பல ஊடகங்கள் இணைக்கப் பட்டிருக்கின்றன. இவையெல்லாவற்றையும் இலகுவாக ஒருங்கிணைத்து புதியதோர் ஊடகத்தை உருவாக்கும் ஒரு சாதனமாக கணினி உள்ளது. இவ்வாறான ஓர் ஒருங்கிணைப்பைக் கொண்ட சாதனமாக கணினி உருவாக்கம் பெற்ற பின்னர் அதற்கு மேலும் மதிப்பு அதிகரித்தது எனலாம்.

அதனால் அது அறிவியல் சாதனம், தகவல் பரிமாற்ற சாதனம் என்பதுடன் பொழுது போக்குச்சாதனமாகவும் மாறியது.



இதனால் அனைவரும் பயன்படுத்தக் கூடிய ஒன்றாக வீட்டுப் பாவனைப் பொருட்களில் ஒன்று போல ஆகியது.

இன்று இணையமானது பரவலாகப் பயன்படுத்தும் ஒன்றாக மாறவும் பயன்படுத்துவோரின் தொகை அதிகரித்துக் கொண்டு செல்லவும் அது ஒரு பல்லூடக பயன்பாடு கொண்டதாக உள்ளமையும் முக்கிய காரணமாகும்.

பல்லூடகக் கணினியானது வழமையான கணினியில் சவுண்ட் காட், ஒலிபெருக்கி முதலியவை பொருத்தப்பட்டதாக இருக்கும். இன்று அனேகமான தனிநபர் கணினிகள் பல்லூடகக் கணினிகளாகவே காணப்படுகின்றன. பல்லூடகக் கணினிகள் அதிக வேகமுள்ளவையாகவும் கூடிய நினைவாற்றலைக் கொண்டவையாகவும் இருக்கும்.

பல்லூடகக் கணினிகள் இன்றைய நவீன வகுப்பறைகளில் கற்பித்தல் சாதனமாக விளங்கி வருகின்றன. சுயமாக கல்வி கற்பதற்கும் தகவல்களை ஒலி, ஒளி எழுத்துவடிவங்களை இணைத்துப் பெறுவதற்கும் இவை உதவுகின்றன. பல்லூடகக் கணினிகள் மூலம் நாம் கலைக் களஞ்சியங்களைப் பயன்படுத்த முடியும். வழமையாக புத்தக வடிவிலுள்ள கலைக் களஞ்சியங்களில் நாம் எழுத்துக்களையும் நிலையான படங்களையும் மட்டுமே பார்க்க முடியும். ஆனால், பல்லூடகக் கணினிகளில் உள்ள கலைக் களஞ்சியங்கள் மூலம் அசையும் படங்கள் ஒலிகள் முப்பரிமாணத் தோற்றங்கள் வரைபடங்கள், சித்திரங்கள் மூலமான விளக்கங்கள் என்பவற்றைப் பார்த்து அதிகளவு விளக்கமான முறையில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

திரைப்படத்துறையில் பல்லூடகக் கணினியில் இப்பொழுது பல்வேறு வகையில் பயன்படுகின்றமையை நீங்கள் அறிந்திருக்கலாம். கணினியின் உதவியுடன் அமைக்கும் காட்சிகள், விசேட தோற்றங்கள், ஒலிகள், முப்பரிமாணத் தோற்றங்கள் என்பன பல்லூடகக் கணினிகளின் உதவியுடனே ஏற்படுத்தப்படுகின்றன. இப்பொழுது மனிதரே நடிக்காத கணினியால் உருவாக்கப்பட்ட திரைப்படங்கள் கூட தயாரித்து வெளியிடப்படுகின்றன. சில தொலைக்காட்சி சேவைகள் அறிவிப்பாளருக்குப் பதிலாக பல்லூடகக் கணினியால் உருவாக்கப்பட்ட மனித உருவங்களை செய்திகள் வாசிக்கவும் அறிவிப்புகளை வெளியிடவும் பயன் படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல்லூடகக் கணினிகளின் பயன்பாட்டில் உருவேற்றம் **(Animation)** இப்பொழுது பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒன்றாகும். பெரும்பாலும் விளம்பரங்களில் உருவேற்றம் சர்வ சாதாரணமாகப் பயன்படுத்தப்படுகிறது. உந்துருளி புலியாக மாறிப்பாயும் காட்சிகள் போன்றவற்றில் இவ் உருவேற்றம் பயன்படுத்தப்படுகின்றது.

**சி.சிவபாலன்**

# நாட்டில் வறுமையை இல்லாதொழிக்க உலக வங்கி திட்டமிட்டு செயற்படுகிறது

**-சமூக பாதுகாப்புத் திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு**

(கொழும்பு)

[illegible]ன் பல்வேறு விதமான பக்கவிளைவுகளை அல்லது பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியது வறுமை.

கல்வி, சுகாதாரம், உணவு, அறிவு, முன்னேற்றம் ஆகியவற்றில் இந்த வறுமை செல்வாக்குச் செலுத்துவதால் அதனை இல்லாதொழிப்பதற்கான சமூக பாதுகாப்புத் திட்டத்திற்கு உலக வங்கி உதவத் திட்டமிட்டிருப்பதாக உலக வங்கியின் சமூக பாது காப்புத் திட்டப் பிரிவின் பணிப்பாளர் ரொபர்ட் ஹொய்ஸ்மன் கூறியுள்ளார்.

தெற்காசியாவில் வறுமையின் பாதிப்புக்கள் தொடர்பாகவும், வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்களையும் ஆராயும் கூட்டம் ஒன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இதில் தெற்காசிய நாடுகளின் வறுமை ஒழிப்புத் திட்டமிடல் நிபுணர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

இக்கூட்டத்தில், வேலையின்மைக்கு முடிவு காண்பது, வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது, உணவு உற்பத்தியை அதிகரிப்பது போன்ற பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்துவது பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், இத்திட்டத்தை அமுல்படுத்துவதில் தெற்காசிய நாடுகளுக்கிடையில் கருத்துப் பரிமாறல்களை மேற்கொள்வது, வறுமை ஒழிப்புத் திட்டங்களை சாதகமாக்குவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

# 24 இலட்சம் ரூபாய் வங்கிப்பணம் ஆயுதபாணிகளால் கொள்ளை

மாத்தறை கொமர்ஷல் வங்கியில் இருந்து 24 இலட்சம் ரூபா பணம் கடந்த வியாழன் அன்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் போல வங்கியினுள் நுழைந்த மூவர் திடீரெனத் தாம் மறைத்து வைத்திருந்த துப்பாக்கிகளை எடுத்து, கடமையில் இருந்த ஊழியர்கள் உட்பட வங்கியில் இருந்த ஊழியர்கள் அனைவரையும் ஆயுத முனையில் பயமுறுத்தி,பெட்டகத்திலிருந்த 24 இலட்சம் ரூபாவையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

வங்கியில் இருந்த அதிகாரி தொலைபேசியில் பொலிசாருடன் தொடர்புகொள்ள முயன்ற போது,அவ் அதிகாரியையும் அவர்கள் தாக்கியுள்ளனர்.

# வாழ்க்கைச் சுட்டெண் வீழ்ச்சி

(கொழும்பு)

வாழ்க்கைச் சுட்டெண் பெப்ரவரி மாதத்தைவிட கடந்த மாதம் 2.3 வீதத்தால் குறைந்துள்ளதாகப் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதம் 3423.1 ஆக இருந்த வாழ்க்கைச் சுட்டெண் கடந்த மாதம் 3344.1 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

அரிசி, மிளகாய், மல்லி, தேசிக்காய், சின்ன வெங்காயம்,கௌப்பி உருளைக் கிழங்கு, தேங்காய், தேங்காய் எண்ணெய்,மீன், கருவாடு, மரக்கறி முதலியவற்றின் விலைகள் குறைந்ததும் பொருட்கள் கட்டுப்பாடின்றி சந்தையில் தாராளமாகக் கிடைப்பதும் இதற்கான காரணமென புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மெய்வன்மைப் போட்டியில் தெரிவான வீரர்கள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பள்ளிகளின் மெய்வல்லுனர் போட்டியில் மாவட்ட ரீதியில் சிறந்த வீர வீராங்கனைகளாகத் தெரிவுசெய்யப் பெற்ற மாணவ மாணவிகளதும் பாடசாலைகளினதும் பெயர் விபரம் பின்வருமாறு:

11 வயது ஆண் - எஸ்.லினேஸ்ராஜ் கிளி.ம.வி., 11வயது பெண் ஏ.தர்சிகா தர்மபுரம்.ம.வி., 13 வயது ஆண் ஆர்.நிசாந்தன் பளை. மத்திய கல்லூரி, 13 வயது பெண் பி.நித்தியா பளை. றோ.க.அ.த.க பாடசாலை, 15 வயது ஆண் எஸ்.சஞ்சித் வட்டக்கச்சி.ம.வி., 15 வயது பெண் எஸ். தாரணி அக்கராயன் ம.வி., எஸ். துசித்தா இராமநாதபுரம் ம.வி.

17 வயது ஆண் கே.பிரதீபன் முழங்காவில் ம.வி, 17 வயது பெண் எல். ஜோதிகா கனகபுரம் ம.வி., 19 வயது ஆண் கே.கோபிநாத் அக்கராயன் அ.த.க. பாடசாலை, 19 வயது பெண் ஆர். சிவராணி கிளி. இந்துக்கல்லூரி, 21 வயது ஆண் வி.திவாகரன் கிளி. மத்திய கல்லூரி, 21 வயது பெண் எஸ் சர்மிலா அக்கராயன் ம.வி. (சோ)

# நெருக்கடிகள் தீர வழியின்றித் தவிக்கும் பளைக் கோட்டப் பாடசாலைகள் அவலம்!

## - கல்வி செயற்பாடுகள் பெரும் பின்னடைவு

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்டத்தின் பளைக் கோட்டப் பாடசாலைகள் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்றன. இதனால், கற்றல், கற்பித்தல், செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, இக் கோட்டக் கல்வி நிலையும் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது.**

இப்பகுதிகளில் கணிசமானளவு மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில், இராணுவ நடவடிக்கைகளால் மோசமாக சேதமடைந்துள்ள பாடசாலை கட்டடங்கள் கூட புனரமைக்கப்படாமையால் பெரும் அவலத்தின் மத்தியில் பாடசாலைகள் இயங்கி வருவதனைக் காணமுடிகிறது.

பளைக் கோட்டத்தில் இயங்கும் பளை மத்திய கல்லூரி இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவாக நிரந்தரக் கட்டடங்கள் மற்றும் அலுவலகம், விஞ்ஞான ஆய்வு கூடம், ஆசிரியர் விடுதிகள் என்பன முற்றாக அழிக்கப்பட்டுள்ள நிலையில் நெருக்கடிகள் மத்தியில் இயங்கிவருகின்றது.

இதுபோல இயக்கச்சி அ.த.க. பாடசாலை வெறும் புல்தரையில் பெரும் கஷ்ரங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. இதே போல் சோரன்பற்று, மாசார், மருதங்கேணி, செம்பியன்பற்று ஆகிய பாடசாலைகள் இவ்வாறான



நிலைமைகளுடனேயே இயங்கி வருகின்றன.

பளைக் கோட்டத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் இராணுவ நடவடிக்கை மூலம் கட்டட இடிபாடுகளைச் சந்தித்ததோடு மட்டுமல்லாது ஆசிரியர் பற்றாக் குறை, குடிநீர் தட்டுப்பாடு, ஆசிரியர், மாணவர்களுக்கான இருப்பிட வசதிகள் ஏதுமற்ற நிலையில் இயங்கிவருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. (பா)

## 3500 பேருக்குச் சிகிச்சை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முத்துஐயன்கட்டு இடது கரையில் அமைந்துள்ள சித்த ஆயுர்வேத மருத்துவமனையில் 06-01-2003 அன்று தொடக்கம் 31-03-2003 வரை 3500 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். (05)

## கணித மொழி அறிவை விருத்தி செய்ய நடவழிக்கை

மன்னார் கல்வி வலய 5ஆம் தர மாணவர்களின் கணித மொழி அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் "வேல்ட் விஷன் லங்கா" நிறுவனத்தின் அனுசரணையுடன் செயற்திட்டம் ஒன்று கடந்த மாசி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளரின் வேண்டுகோளிற்கிணங்க இச்செயற்திட்டமானது மன்னார் கல்வி வலயத்தின் 29 பாடசாலைகளில் செயற்படுத்தப்படுகின்றது. இதன் பயனாக இப்பாடசாலைகளைச் சேர்ந்த 847 மாணவர்களுக்கு மாலை நேர விசேட வகுப்புக்களும் அவர்களுக்கான மதிய உணவும் வேல்ட் விஷன் நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இம்மாணவர்களுக்கு கற்பிக்கவென 41 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மாதாந்தம் 1500 ரூபா கொடுப்பனவாக மாசி மாதம் முதல் இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

## மரக்கறிச் செய்கையில் மேம்பாட்டுப் பயிற்சி நெறி

மரக்கறிச் செய்கையில் நாற்று மேடை பராமரிப்பும் கொள்கலன் மூலம் நாற்று உற்பத்தி என்பன தொடர்பான பயிற்சி வகுப்பு சின்னடம்பன் கிராமத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஒழுங்குபடுத்தலில் அப்பிரதேச கமக்கார அமைப்புத் தலைமையில் இந்தப் பயிற்சி வகுப்பு இடம்பெற்றது.

இப்பகுதி விவசாய போதனாசிரியர்கள் இந்தப் பயிற்சி வகுப்பினை நடத்தினர்.

## புதிய பீடாதிபதி நியமனம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாக பீடாதிபதியாகப் பேராசிரியர் இராஜேஸ்வரி மகேஸ்வரன் நியமனம் பெற்றுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேரவையில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாசின் சிபார்சை பேரவை ஏற்றுக்கொண்டு இந் நியமனத்தை 03 ஆண்டுகளுக்கு வழங்கியுள்ளது.

## வவுனியா மாவட்ட கமக்கார அமைப்புக்களை துரித கதியில் புனரமைக்க நடவடிக்கை

வவுனியா மாவட்ட கமக்கார அமைப்புக்களை புனரமைத்து துரிதகதியில் அவற்றை இயங்க வைக்க மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நியாப் திட்டத்தின் மூலம் வவுனியா மாவட்டத்தில் நீர்ப்பாசனக் குளங்கள் சில புனரமைக் கப்படவுள்ளன. இந்த வேலைகளை மிக விரைவாக ஆரம்பிப்பதற்கு ஏதுவாகவும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

கமக்கார அமைப்புக்களை மீள இயங்க வைப்பதற்கான கூட்டங்கள் மாவட்ட பொ. மே. நி. பொறுப்பாளர் முல்லைவீரன், கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் வியாழனன்று புளியங்குளம் பெரிய மடுவில் காலை 10.00 மணிக்கும், வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு சேமமடு புதுக்குளத்திலும் இதற்கான கூட்டங்கள் நடைபெறவுள்ளதாக இப்பகுதி விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## புனரமைக்க நடவடிக்கை

பருத்தித்துறை பிரதேச செயலகம் 1 கோடி ரூபாவிலும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை 75 லட்ச ரூபாவிலும் புனரமைக்கப்படவுள்ளன. இது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கான தீர்மானம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கூறியுள்ளார்.

## 2300 பேருக்கு ஆசிரிய நியமனம்

கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரியர் டிப்ளோமாப் பயிற்சியை முடித்து வெளியேறியுள்ள 2300 பேருக்கு ஏப்ரல் மாத இறுதிக்குள் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதுவரை கல்விச் சேவைக் குழுவினால் வழங்கப்பட்டு வந்த நியமனங்கள், இவ்வாண்டு முதல் மாகாணக்கல்வி அமைச்சினால் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வெடிபொருள், இயற்கை அனர்த்தங்களால் வடமராட்சி கிழக்கில் 140 பேர் வலுவிழப்பு!

(வடமராட்சி கிழக்கு)

வெடிபொருட்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் வடமராட்சி கிழக்கில் நூற்றி நாற்பது பேர் வலுவிழந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

வெண்புறா மற்றும் யுனிசெப் நிறுவனம் இணைந்து நடத்திய ஆய்வொன்றிலேயே இது தெரியவந்துள்ளது. மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையிலான பகுதிகளில் இதற்கான ஆய்வுகள் இடம்பெற்றிருந்தன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கணக்கெடுப்பின்படி 140 பேர் வலுவிழந்தோர்களாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இத்தகவல்களைத் தாளையடியிலுள்ள வெண்புறா அலுவலர் தெரிவித்தார். (11)

## இரு உப நிலையங்கள் திறப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கால்நடை வைத்தியர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் அதிகரிப்பதற்காகவும் பண்ணையாளர்கள் நலன் கருதியும் முத்து ஐயன் கட்டு இடது கரை சந்தி படிப்பகத்திலும் சின்னச்சாளம்பன் முன்பள்ளியிலும் நேற்று முதல் பதிவுகளை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே சினைப்படுத்தல் சேவையைப் பெறவிரும்பும் பண்ணையாளர்கள் தங்கள் பெயர், முகவரியினைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதற்கான சுக்கிலங்கள் காராளி செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்திலிருந்து எடுத்து வரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## தேசிய மட்டப் போட்டிகள்

(கொழும்பு)

இந்துசமய அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்து நடத்தும் இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

பண்ணிசைப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதியும், பேச்சுப்போட்டி எதிர்வரும் 11ஆம் திகதியும் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இரண்டு தினங்களிலும் போட்டிகள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். மாவட்டமட்டத்தில் நடத்தப்பட்ட பேச்சுமற்றும் பண்ணிசைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான அறிவித்தல்கள் மாவட்ட இணைப்பாளர்கள் ஊடாகவும் பாடசாலை அதிபர்கள் ஊடாகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது.

## பொறுப்பற்ற அரசாங்க ஊழியர் மீது நடவடிக்கை

அரசாங்கத் திணைக்களங்கள், அலுவலகங்களில் பணிபுரியும் சில அதிகாரிகள், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கடமை நேரங்களில் அங்கு காணப்படுவதில்லை என்று பொது நிர்வாக அமைச்சுக்கு குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டுள்ளன.

இதனால் இவ்வாறான அதிகாரிகள், ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்கள் கடமைக்கு வந்து விட்டு, தமது தனிப்பட்ட வேலைகளுக்காகச் சென்று விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நீர்ப்பாசனக்குழுக் கூட்டம்

கல்மடுக்குள நீர்ப்பாசனக் குழுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை புளியம்பொக்கணை கமநல கேந்திர நிலையத்தில் கிளி.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கண்டாவளைப் பிரதேச செயலர் பி.கா. மத்தியாஸ் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன எந்திரி கந்தசாமி, கிளி/மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ. ஆனந்தராசா, கமநல சேவை பெரும்பாக உத்தியோகஸ்தர் சுந்தரமூர்த்தி,கண்டாவளைப் பிரதேச த.பொ.மே. நிறுவனப் பொறுப்பாளர் காசிநாதன்,கண்டாவளை பிரதேச காணி உத்தியோகஸ்தர் நமசிவாயம் கிராம சேவகர்கள் கலந்து கொண்டனர்.

### சிந்தனைக்கு



ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவளி களைச் சந்திக்கின்றது; பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது; கொந்தளிப்பான பல சூழ் நிலைகளுக்கு முகங்கொடுக்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.


# ஈழநாதம்
EELANATHAM

யாழ். சாலை, கிளிநொச்சி. 08-04-2003


## அர்த்தமற்றது!

இலங்கையில் சமாதான முயற்சிகளில் அநுசரணையாளர்களாகப் பணிபுரியும் நோர்வே அரசு மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு என்பனவற்றின் மீது இந்தியா சீற்றம் கொண்டுள்ளதாக வெளியாகும் தகவல்கள் சரியானவையாயின்,இந்தியா இவ்விடயத்தில் தேவையற்ற விதத்தில் மூக்கை நுழைத்துள்ளது என்றே கொள்ள வேண்டியிருக்கும்.

அண்மையில் இலங்கையின் கிழக்குக் கடற்பிராந்தியத்தில் சீன மீன்பிடிக் கப்பல் ஒன்று தாக்கி மூழ்கடிக்கப்பட்டமை தொடர்பாகவும், சிறிலங்காவின் இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற கப்பல் மீது நடத்திய தாக்குதல் தொடர்பாகவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கை தொடர்பாகவுமே இந்தியா சீற்றம் கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிலும் குறிப்பாக, சீன மீன்பிடிப்படகு தாக்கப்பட்டமை தொடர்பாக கண்காணிப்புக்குழு வெளியிட்ட அறிக்கையானது இந்திய – சீன உறவைப் பாதிக்கக்கூடும் என இந்தியா கருதுவதே இத்தகைய சீற்றத்திற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. அதாவது, இக்கடற்பிராந்தியத்தில் செயற்படும் மூன்றாவது தரப்பாக இந்தியாவோ அன்றி இந்திய ஆதரவுபெற்ற ஆயுதக்குழுக்களோ செயற்படுவதாகக் கொள்ளப்படும் இடத்து சீனக்கப்பல் தாக்கப்பட்டமையானது இந்திய–சீன உறவைப்பாதிக்கும் என இந்திய தரப்புக் கொண்டுள்ள ஆதங்கமே இச்சீற்றத்திற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

ஆனால், இந்தியாவின் இச் சீற்றத்திற்கு அர்த்தம் ஏதும் உண்டா என்பதற்கு முன்னால், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது தனது இஷ்டத்திற்கு ஏற்ப ஓர் அறிக்கை தயாரித்து விட்டுவிடவில்லை என்பதைக் கண்காணிப்புக்குழுவின் சட்ட ஆலோசகர் குறிப்பிட்டுள்ளது கவனத்திற் கொள்ளத்தக்கதாயுள்ளது.

"கடந்த காலங்களில் நடந்த சம்பவங்கள் தொடர்பான விடயங்களில் தீர்வுகளைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தது. பிரச்சினைகளுக்குச் சர்வதேச விதிமுறைகளைக் கொண்டே தீர்வுகாண முயற்சிக்கப்பட்டது. அண்மையில் கிழக்குக் கடலில் இடம் பெற்ற சம்பவங்களுடன் மூன்றாம் தரப்பு ஒன்று சம்பந்தப்பட்டிருப்பது உறுதியாகத் தெரிகின்றது'' என்ற கண்காணிப்புக்குழுவின் சட்ட ஆலோசகரின் கூற்றுக்கள், கண்காணிப்புக்குழு ஆதாரங்கள் எதுவுமற்ற ரீதியில் பேசவில்லை என்பதையே வெளிக்காட்டுவதாகவுள்ளது.

ஆனால்,கண்காணிப்புக்குழு தனது அறிக்கையில் அம் மூன்றாம் தரப்பு இந்தியா என்றோ அன்றி இந்தியா ஆதரவுடன் செயற்படும் ஆயுதக்குழு என்றோ எதனையும் சுட்டிக்காட்டவில்லை. கடற் புலிகளும்–சிறிலங்கா கடற்படையும் இத்தாக்குதலுடன் சம்பந்தப்படவில்லை என்றே கூறியுள்ளது.

ஆகையினால், கண்காணிப்புக் குழுவின் தாக்குதல் தொடர்பான அறிக்கையானது, இந்திய தரப்பை எந்த விதத்திலும் சுட்டிக் காட்டுவதாக அமையவில்லை.சீனாவையும் இந்தியாவையும் சிண்டு முடிவதாகவோ, இந்திய–சீன உறவைச் சீர்குலைக்க முற்படுவதாகவோ கொள்வதற்கு எதுவுமே இல்லை.

இதற்கும் அப்பால் இந்தியா ஏன் இவ்விடயத்தில், இத்தகைய அக்கறை காட்ட வேண்டும் என்ற கேள்வியும் எழுகின்றது. அதாவது, இத்தாக்குதல் சம்பவங்களானது இலங்கையின் கடற்பரப்பில்– அதிலும் குறிப்பாகத் தமிழீழக் கடற்பரப்பில் நடந்தவையாகும். இக்கடற்பரப்பில் இந்தியா செயற்படுவதாக எப்பொழுதும் எவரும் தெரிவிக்கவும் இல்லை. இந்தியா தான் செயற்படுவதாகக் கூறிக்கொள்ளவும் இல்லை.

இந்நிலையில் இத்தாக்குதலுக்கும் தனக்கும் தொடர்புள்ளதாக, கண்காணிப்புக்குழு கூறுவதாக இந்தியா ஏன் கற்பனை செய்து கொள்ளுதல் வேண்டும். சீன அரசுகூட இக்கப்பல் மூழ்கடிப்புத் தொடர்பாகச் சிறிலங்கா அரசிடம் விளக்கம் கோரியதே தவிர இந்தியாவுடன் தொடர்பு ஏதும் கொண்டதாக இதுவரையில் தகவல் ஏதும் வெளியாகியதாக இல்லை.

ஆகையினால், இவ்விடயத்தில் இந்தியா காட்டுகின்ற அக் கறையானது, ஒரு புறத்தில் தேவையற்றதாக இருத்தல் வேண் டும்.அல்லது, கப்பல் மூழ்கடிப்புத் தொடர்பான விடயத்தினை வேறு வகையில் பயன்படுத்திக் கொள்ள அது முற்பட்டிருத்தல் வேண்டும். ஆனால், இது சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் முயற்சியாக இருப்பது வரவேற்கத்தக்க வழிமுறையல்ல.

### கிளி.பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தில்

# பயிற்சியை முடித்த 35 பேருக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பு

(அலுவல செய்தியாளர்)

கிளிநொச்சி பெண்கள் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சியை முடித்துக்கொண்ட 35 பெண்கள் நேற்று பரிசில்களும், சான்றி தழ்களும் வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர்.

சமுதாய முன்னேற்ற நிலையம் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணை யுடனும், தமிழர் புனர்வாழ்வுக் கழக பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆதர வுடனுமான பெண்கள் தொழிற் பயிற்சி நிறைவு விழாவும் கண் காட்சியும் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி ஜெயந்திநகர் பெண்கள் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் நிறுவன நிர்வாக அலுவலர் திருமதி ஜ.விஜயராணி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முதன்மை விருந்தின ராக கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

ஈகச்சுடரினை மூன்று மாவீரர்க ளான இரண்டாம் லெப். பட்டு, வீரவேங்கை பட்டு, வீரவேங்கை பட்டு ஆகியோரின் தாயார் மா. பற்குணாம்பிகை, கிளி/கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தி யானந்தன் ஆகியோர் ஏற்றி வைக்க, கண்காட்சி மண்டபத் தினை சம்பிரதாய பூர்வமாக மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் விதுஷா அவர்கள் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

நிகழ்வில் வடபோர் முனைக் கட்டளைத்தளபதி கேணல் தீபன்,கிளி. வலயக் கல்விப் பணிமனை (முறைசாராப்பிரிவு) சின்னத்துரை ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங் குமரன், சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா, ஊரக வளர்ச்சித்திட்ட பொறுப் பாளர் இ.ம.அன்பரசன், மாவீரர் போராளி நலன்காப்பகப் பொறுப் பாளர் திருக்குமரன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பா ளர் ராணிமைந்தன், சமுதாய முன்னேற்ற நிலைய இயக்குநர் பூங்குன்றன், தமிழர் புனர்வாழ்வுக் கழக துணைப் பொறுப்பாளர் இனியவன், மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் அர்ச்சுனா, இந்நிறுவனச் செயலர் கணேஸ் வரன், பொருளாளர் மகாதேவன் ஆகியோர் கலந்து பயிற்சியை முடித்துக்கொண்ட 35 பெண்க ளுக்கு பரிசில்களும் சான்றி தழ்களும் வழங்கிக் கௌரவித் தனர்.போராளிகளும், பொது மக்களும் இந்நிகழ்வில் பெரு மளவில் கலந்து கொண்டனர்.

மேற்படி பயிற்சித் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவிகளுக்கு சிறப்புப் பரிசில் கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இறுதி நிகழ்வாக கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன

(சோ,லோ)

# கண்ணிவெடியகற்றும் பிரிவால் கண்ணிவெடிகள் அழிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் விசேட பயிற்சி பெற்ற அணியினரால் வெடிபொ ருட்கள் மீட்கப்பட்டு அழிக்கப் பட்டன.

நெடுங்கேணிப் பகுதியில் நேற்று 81 மி.மீ எறிகணை- 14, 60 மி.மீ எறிகணை - 20, 40 மி.மீ எறிகணை -01, பியூஸ் - 08 கைக் குண்டு 01 ஆகிய வெடிக்கும் நிலையில் காணப்பட்ட வெடி பொருட்கள் நேற்று பி.பகல் 4.30 மணிக்கு விசேட பயிற்சி பெற்ற மனிதநேய கண்ணிவெடி அகற் றும் விசேட அணியினரால் தகர்த் தழிக்கப்பட்டன.

(பா)

### பாழடைந்த வீட்டிலிருந்து

# ஈ.பி.டி.பி.உறுப்பினரின் சடலம் கண்டெடுப்பு

(கொழும்பு)

சுன்னாகம் சூராவத்தை பகுதி யில் பாழடைந்த வீடொன்றி லிருந்து கைகள் கட்டப்பட்ட நிலையில் ஆணின் சடலம் ஒன்று நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

லிங்கேஸ் எனப்படும் 19 வயதான அமிர்தராஜ் இராசன் என்பவரே சடலமாக மீட்கப்பட் டுள்ளவராவார். இவர் ஈ.பி.டி.பி உறுப்பினர் என்று யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.அமைப்பாளர் கே.வி. குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் ஈ.பி.டி.பி. பணிம னையில் இருந்து மருத்து வமனைக்குச் சென்ற போது காணாமல் போனதாகவும் இது குறித்து தாம் பொலிசாரிடம் முறையிட்டிருந்ததாகவும் நேற்றுக் காலை தமக்குக்கிடைத்த தகவ லையடுத்து சடலத்தை கண்டு மீட்டதாகவும் ஈ.பி.டி.பி.யின் அமை ப்பாளர் குகேந்திரன் கூறியுள் ளார். இச்சம்பவம் குறித்த விசார ணை சுன்னாகம் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி பாலித்த பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்றுவருவதாகவும் தெரி விக்கப்படுகிறது.

# உழவு இயந்திரத்துடனான விபத்தில் சைக்கிளில் சென்றவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் உழவு இயந்திரம் துவிச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக் குள்ளானதில் துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்தவர் காயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் கரடிப்போக்குச் சந்திக்கும் கந்தசாமி கோவிலுக் கும் இடையில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த நபர் மீது உழவு இயந்திரம் மோதியது. துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த நபர் காயமடைந்தார். அவர் பயணம் செய்த துவிச்சக்கரவண்டி கடும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

(பா)

# அமெரிக்க தொலைத்தொடர்பு மையத்தின் மீது தாக்குதல்!

### இரு அமெ. படையினர் உட்பட 4 பேர் பலி

தெற்கு ஈராக்கிலுள்ள அமெரிக்க தொலைத்தொடர்பு மையத்தின் மீது ஈராக் படையினர் நேற்று ரொக்கற் தாக்குதலை நடத்தியதில் இரண்டு அமெரிக்கப் படையினரும், இரண்டு அமெரி க்கப் பத்திரிகையாளர்களும் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக் கச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ரொக்கற் தாக்குதலில் மேலும் 14 பேர் காயமடைந்துள் ளார்கள். அதில் இருவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் யுத்த தந்திர செயற்பாட்டு மையத்துக்கரு கேயுள்ள தொலைத் தொடர்பு மை யத்தின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று பாக் தாத்திற்கு கிழக்கே நடந்த மற்றொரு சம்பவத்தில் இரண்டு அமெரிக்க கடற்படையினர் கொல் லப்பட்டும் இரண்டு பேர் காயம டைந்துமுள்ளனர். இவர்கள் பய ணம் செய்த கவச வாகனம் மீது ஈராக்கிய படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

# பாக்தாத்தின் மையப் பகுதியில் கடும் சண்டை:

# சதாம் மாளிகைகளைப் பிடித்ததாக அமெ. அறிவிப்பு!

(பாக்தாத)

அமெரிக்கப் படைகள் ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் மையப் பகுதி வரையும் முன்னேறியுள்ள தாகவும், அங்கு அமெரிக்கப் படைகளுக்கும் ஈராக் படைகளுக் கும் இடையில் தொடர்ந்தும் சண்டைகள் இடம்பெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் பாக்தாத் மீதான தாக்குதலை ஆரம்பித்த படைகள் நேற்று ஈராக்கின் மையப் பகுதி வரையில் முன்னே றியுள்ளதாகவும், ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் இரண்டு மாளிகைகளைக் கைப்பற்றியுள்ள தாகவும், அம்மாளிகைகளில் தேடுதல்களில் ஈடுபட்டு வருவதாக வும் அமெரிக்கப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சதாம் ஹுசைனின் மாளிகைகள் கைப்பற் றப்பட்டதாகவும், பாக்தாத்தின் மையப் பகுதிக்குள் அமெரிக்கப் படைகள் முன்னேறி யிருப்பதாக வும் வெளியான செய்திகளை ஈராக் தகவல் தொடர்பு அமைச்சர் மறுத்துள்ளார். அத்தோடு நகரின் சில பகுதிகளுக்கு பத்திரிகையா ளர் களையும் அழைத்துச் சென்று காண்பித்துள்ளனர்..

இதேவேளை, சதாம் ஹுசை னின் மைத்துனரும், தென்பகுதித் தளபதியுமாகிய அலி ஹசன் அல் மஜீத் நேற்று கொல்லப்பட்டதாக பிரிட்டிஷ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. "கெமிக்கல் அலி" என அழைக்கப்படும் இவர் கடந்த வாரத் தாக்குதலில் கொல் லப்பட்டதாக முன்னர் அறிவிக் கப்பட்டபோதும் பின்னர் அவர் மரணமடையவில்லை என அமெரிக்கா உறுதிப்படுத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஐ.நா.மனித...

தமிழீழ மக்களின் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் அங்கீகரிக் கப்படவேண்டும், தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது தடை விதித்துள்ள நாடுகள் அத்தடையினை நீக்கவேண்டும், உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பொதுமக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்தி ருக்கும் சிறிலங்கா படையினர் அங்கிருந்து வெளியேற வேண்டும், தமிழீழ கடற்பரப்பிலே நடைமுறையில் உள்ள மீன்பி டித்தடை முற்றாக நீக்கப்பட வேணடும், இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப் படும்வரை தமிழ் அகதிகள் இலங்கைத்தீவுக்கு திருப்பி அனுப்பப்படுவது முற்றாக நீக்கப்படவேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தே இந்த ஐ.நா.வை நோக்கிய அமைதிப் பேரணி இடம்பெற்றது.

ஜெனீவாவின் பிரதான புகையிரத நிலையத்தில் இருந்து நாதஸ்வர இசை முழங்க பேரணி ஆரம்பமாகி நடைபெற்றது.

ஐ.நா. முன்றலில் தமிழீழ தேசியக் கொடியினை விடுத லைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கல்லறை தழுவும் கானங்கள், கடலோரக் காற்று, அலையின் வரிகள், கடற்புலிகள் போன்ற இசைத் தட்டுக்களும், ஒளி நாடாக்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

அத்துடன் திருமதி அடேல் பாலசிங்கம் அவர்கள் எழுதிய "சுதந்திர வேட்கை" என்ற நூல் அங்கு வைத்து அவரது கையெழுத்து அடக்கமாக வெளியிடப்பட்டது.

### சிங்கள....

பங்கு கொள்கின்றார்களா? சிங்கள அரசா அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளா இந்தப் பேச்சுவார்த்தையில் உண்மையாக நம்பிக்கை கொண்டு செயற்படு கின்றார்கள் என்பதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் நேர்மையாக, நிதானமாக, உண்மையாக இந்த பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்கின்றோம். சிங்களவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்ப தற்கு எவ்வளவு இடையூறுகளை விளைவிக்கின்றார்கள் என்பதை உலகத்துக்கு உதாரணமாக எடுத்துக்காட்டும் நோக்குடன் தான் இந்தப் பேச்சுக்களை நடத்திவரு கின்றோம்.

அடுத்தது கடல் பிரச்சினை. கடலில் பல சம்பவங்கள் நடக்கின் றன. எங்களுடைய மீன்பிடி படகு ஒன்றைக் கட்டி இழுத்துக் கொண்டு போக முயற்சித்த பொழுது எமது போராளிகள் அந்த படகுக்கு தீ வைத்து நெடுந்தீவுக் கடலில் தற்கொலை புரிந்த சம்பவம், பின்னர் முல்லைத்தீவில் இருந்து 220 கடல் மைல்களுக்கு அப்பால் - அதாவது சர்வதேச கடற்பரப்பில் எமது எண்ணெய்த் தாங்கிக் கப்பல் ஒன்று தாக்கி அழிக்கப் பட்டது.

அதாவது சிறிலங்கா கடற்படைக்குச் சம்பந்தமில்லாத ஒரு சர்வதேச கடற்பரப்பில் நான் கிளிநொச்சியில் நிற்கும்போது இச்சம்பவம் நடந்தது.

அப்போது பிரபாகரன் மிகவும் ஆத்திரப்பட்டார். அங்கு போராளி கள் மிகவும் ஆவேசப்பட்டார்கள். எப்படியாவது இதற்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்று - அப்பொழுது நான் தலைவருடன் கதைத்தேன்.

பொறுமையை இழக்க வேண்டாம். இது வேண்டும் என்று செய்கின்றார்கள் - அதா வது, எங்களுக்கு ஆத்திரமூட்டி ஒரு எதிர்த் தாக்குதலை நடத்தி பின்னர் புலிகள் போர் நிறுத் த்ததை குழப்பி விட்டார்கள், பேச்சுவார்த்தையைக் குழப்பி விட்டார்கள் என்று எங்கள் மீது பழி சுமத்துவதற்காக திட்டமிட்டு கடற்படை இதைச் செய்கின்றது என்று சொல்லி ஒரு அளவு பிரபாகரனை சாந்தப்படுத்தி பதில் நடவடிக்கை ஒன்றும் எடுக்காமல் செய்து, பின்னர் ஜப்பானில் நடந்த பேச்சுவார்த் தைக்குப் போனோம்.

இதில் பதினொரு போராளிகள் - அதுவும் எங்களுக்கு மிகவும் வேண்டிய - கடற்புலிகளை சேர்ந்த மூத்த தளபதிகள் அவர்கள். அவர்க ளின் இழப்பு எங்களுக்குப் பெரிய இழப்பு. கப்பலும் அதிக விலை கொண்ட கப்பல்.

ஆகவே, இந்தக் கப்பல் அழிக்கப்பட்டதும் எங்களுக்குப் பெரிய நஷ்டம். ஒரு ஆத்திர முட்டும் செயல். அப்படியிருந்தும் பொறுமை இழக்காமல் அங்கு யுத்தத்தைத் தடுத்து சமா தானத்தை நிலைநாட்டி இந்தப் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்ற ரீதியில் நாங்கள் எதிர் நடவடிக்கைகளைத் - தவிர்த்துக் கொண்டோம்.

கடலில் பின்னர் ஒரு சீனப் படகு ஒன்று தாக்கப்பட்டது. இதை யார் செய்தார்களோ எங்களுக்குத் தெரியாது. ஆனால், என்ன உண்மை என்று சொன் னால், எமது தமிழீழக் கடற்பரப் பில் சிறிலங்கா சிங்கள கடற்படை யும், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளும் மட்டுமல்ல, அங்கு பலர் நடமாடுகின்றார்கள்.

இந்தியக் கப்பல்கள் எமது கடல் ஓரமாக வந்து எங்களுடைய மீனவர்களின் வலையை வெட்டி மீனவர்களின் படகுகளைத் தாக்கி அழித்து வருகின்றன. மன்னார் கடலோரமாக இது நிகழ்ந்து வருகின்றது. நாங்கள் பல தடவை இந்த இந்திய மீன்பிடிப் படகுகளைப் பிடித்து மீனவர் களைப் பிடித்து வெருட்டி விட்டி ருக்கின்றோம்.

இப்போது சீனாக்காரநம் வரத் தொடங்கி விட்டனர் அப்ப எல்லோரும் வந்து போகின்றார் கள். எங்களுடைய கடலில் சீனா வந்து, இந்தியா வந்து மீன்பிடிக் கலாம், இறால் பிடிக்கலாம், ஆனால் தமிழன் மாத்திரம் பிடிக்க முடியாது. தமிழனுக்குத் தான் கட்டுப்பாடு.

மீன்பிடித் தடைகள் இன்னும் முற்றாக நீக்கப்படவில்லை. விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் எங்களுடைய கடலில் சுதந்திர மாக நடமாட முடியாது. இப்படி யாக எங்களுடைய கடற்பரப்பில் அநியாயம் நடக்கின்றது.

இதற்கு மூலகாரணம் யார் என்று பார்த்தால். அங்கு கடற் படைத் தளபதி ஒருவர் இருக்கின் றார். அவர் அம்மாவின் ஆள். அவருடைய பதவி மூன்று வருடம் கூட்டப்பட்டிருக்கின்றது.

பிரச்சினையை ஏற்படுத்தி சண்டையை தொடக்கு என்று அம்மா ஆணை கொடுத்திருக் கின்றார் போல இருக்கின்றது. அது தான் கடலில் பிரச்சினை யாக இருக்கின்றது.

கண்காணிப்புக்குழு புலிகளையும் கடற்படையையும் சேர்த்து ஒரு மாநாட்டைக் கூட்டி வடக்கு-கிழக்கு கடற்பரப்பில் பிரச்சினை இல்லாத மாதிரி ஒரு செயற்திட்டத்தை உருவாக்க முயற்சிகள் நடந்து கொண்டிருக் கின்றது.

எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் ஒன்றுபட்ட சக்தியாக விடுதலைப்புலி களுக்குப் பின்னால் நின்று எமக்கிருந்த சமாதான முயற்சியில் முழு ஆதரவைத் தந்து வருகி றார்கள் அரசாங்கம் அமெரிக் காவிற்குப் பின்னாலும் ஜப்பா னுக்குப் பின்னாலும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குப் பின்னாலும் சென்றுகொண்டிருக்கிறது.

அதேவேளை சனாதிபதி சந்தி ரிகா இந்தியாவிடம் போகிறார் ஏனென்றால் சனாதிபதிக்கு இப்பொழுது தேவை. எப்படியா வது இந்தப் பேச்சைக் குழப்ப வேண்டும். இந்தியாவை இதற்குள் கொண்டுவரவேண்டும். இந்தியா வைக் கொண்டுவந்து புலிகளின் தலைமையில் இப்பிரச்சினை தீரக்கூடாது என்பதிலும் புலிகளின் தலைமையில் சுயாட்சி அதிகாரம் கொண்ட ஆட்சி வடக்கு- கிழக்கில் வரக்கூடதென்பதிலும் சனாதிபதி தீவிரமாக நிற்கிறார்.

இந்தியாவில் நிலைப்பாட்டைப் பற்றிச் சொல்லவிரும்புகிறேன். நீண்டகாலத்திற்கு முன்னரே இந்தப்பேச்சுவார்த்தை இந்தியா வில் நடத்தினால் நல்லது என்று சொல்லியிருந்தோம். சென்னையில் இந்தப்பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டும். இந்தியா இதில் பங்குபற்ற வேண்டும் என்று இந்தியாவிற்கு நட்புக்கரம் நீட்டினோம் - ஆனால் இந்தியா அக்கறை எடுக்க வில்லை. இப்பொழுது என்ன வென்றால் இந்தியா படிப்படியாக ஓரங்கட்டப்பட்ட நிலையிலுள்ளது. அவர்கள் எமது மக்களது பிரச்சினையில் பெரிய அக்கறை காட்டவில்லை. 10 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த யுத்தத்தில் தலை யிட்டு அதாவது எமது பிரச்சினை யில் தலையிட்டு அது ஒரு யுத்தமாக மாறி புலிகளுக்கும் இந்தியாவிற்குமிடையில் பெரிய முரண்பாடுகள் ஏற்பட்ட வரலாறு மக்களுக்குத் தெரியும். ஆனால் இந்தியா இன்னும் பகைமை உணர்வுடன் தான் இருக்கிது. இதில் தலையிட விருப்பம் ஆனால் தலையிடவும் விருப்ப மில்லை. ஏனென்றால் புலிகள் இப்படித்தான் பேச்சுவார்த் தைக்குப் போவார்கள் பின்னர் பேச்சை குழப்பிவிட்டு வந்துவிடு வார்கள். ஆகவே இதற்குள் தாங்கள் போய் தலையிடக் கூடாதென்று எண்ணியிருந்தார்கள். தற்போது பேச்சுவார்த்தை முன்னேறிச் செல்கிறது. ஒரு வருடமாக போர்நிறுத்தம் செம்மையாக செயற்படுகிறது. ஆறு மாதங்களுக்கும் மேலாக பேச்சுவார்த்தைகள் முன்னேறிச் செல்கிறது. உலக நாடுகள் ஸ்கன்டினேவியன் நாடுகள், ஜப்பான் போன்ற பெரிய வல்லரசுகள் கூட இதற்குள் வந்துள்ளன. அமெரிக்காவின் ஆதிக்கம் இதற்குள் வருகிறது. ஆகவே இப்போது தன்னை விட்டுவிட்டு தனது பின்வாச லிலுள்ள ஒரு நாட்டில் அண்மிய சக்திகள் வந்து நிலை கொண்டு இந்த சமாதான முயற்சியை மேற்கொள்வதால் தன்னுடைய செல்வாக்குப் போய் விடுமோ என்று இந்தியா பயப்படுகிறது.

இந்தியா தலையிட்டு எமது மக்களுக்கு நீதியை நிலைநாட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், புலிகளோடும், புலிக ளின் தலைமைப்பீடத்தோடும் ஒரு நல்லுறவைப் பேண முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்ய முயற்சிக்காமல் ஆனந்தசங் கரியை தனியாக அழைத்துக் கதைப்பதோ அல்லது டக்ளஸ் தேவானந்தாவை இரகசியமாக அழைத்துக் கதைப்பதோ இந்தப் பிரச்சினைக்கு முடிவைக் கொடுக்காது. எங்களுக்குத் தெரியும். என்னென்ன மாதிரி செய்கிறார்கள் என்று ஆனால் நாங்கள் இந்தியாவை ஒரு நேச சக்தியாகத்தான் பார்க்கின்றோம். பழைய நிகழ்வுகள், பழைய பகைமை உணர்வுகள், பழைய யுத்தங்களை மறந்து இந்தியா எமது பொதுமக்களின் நலனுக் காக புலிகளுடனும் நட்புறவை வளர்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் அவர்களும் பங்குகொண்டு ஒரு நியாயமான தீர்வைத் தேடித்தர வேண்டும் என்பதே எமது நோக்கம்.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் அமெரிக்கா மற்றைய நாடுகள் மூலம் இந்த பேச்சுவார்த்தைக்கு முழு ஆதரவைக் கொடுத்த போதும் இந்த சமாதான முயற்சி தொடர் பான மாநாடு ஒன்று இம்மாதம் 14 ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெவுள்ளது. இதற்குப் புலிகளுக்கு அழைப்பு வர வில்லை. ஏன் வரவில்லை என்றால் நாங்கள் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட இயக்கம். அந்த தடையை நீக்குவதென்றால் நாங்கள் வன்முறைப் போரைக் கைவிட வேண்டும் என்று அமெரிக்கா கூறுகிறது. நாங்கள் வன்முறையைக் கைவிட்டு விட்டோம். போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கிறோம். இப்பொழுது யுத்தம் இல்லை. ஆகவே இந்தத் தடையை தொடர்ந்து வைத்தி ருக்கத் தேவையில்லை தடையை நீக்கிவிட்டு. ஒரு சமத்துவசக் தியாக தமிழ் மக்களின் பிரதிநிதியாகவும் எம்மையும் அழையுங்கள் என்று கேட்கின் றோம். ஆனால் அதைப்பற்றி ஒரு முடிவும் இல்லை. அமெரிக்கா எமக்கு வன்முறையைப் பற்றி போதிக்கக்கூடாது. நாங்கள் வன்முறையாளர்கள் அல்ல. நாங்கள் எங்கள் மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடும் போராட்ட சக்தி - விடுதலை இயக்கம். நாங்கள் யுத்தத்தை கைவிட்டு சமாதானத்தை தழுவி எமது மக்களின் உரிமைக்காக பேசிக்கொண்டிருக்கின்றோம். எங்கள் மீது தடையை வைத்திருக் கத்தேவையில்லை. எங்களை இந்த மாநாட்டிற்கு அழைக்காமல் விடுவதால் இந்த சமாதானத்தை முன்னெடுக்க முடியாது. ஏனென்றால் புலிகள் இல்லாமல் இலங்கையில் சமாதானம் வராது. இந்தியாவும், சரி, அமெரிக்காவும் சரி எங்களை நேசக்கரம் நீட்டி அழைக்க வேண்டும். காலந்தாழ்த்திப் போய்க்கொண்டிருந்தால் இந்தியாவோ அமெரிக்காவோ ஆசிய சமாதானத்திலும், ஆசிய மக்கள் மீதும் ஒரு உண்மையான செல்வாக்கைப் பிரயோகிக்க முடியாத சூழ்நிலை பிறக்கும் எனத் தெரிவித்தார்.


தவத்திரு

வே. முருகேசு சுவாமிகளின்

குருபூசை தினம்



09-04-2003 அன்று சந்நிதி முருகன் ஆலயத்தில் அபிசேகமும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் 63 நாயன்மார் பூசையும், அன்னதானமும் நடைபெறும். அன்றையதினம் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சுவாமிகளின் அன்பர்கள் சார்பாக

ஆ. அருணாசலம்

(சி-7924)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.